செ.வெ.எண்:27 நாள்: 15.08.2018

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற 72-வது சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, தியாகிகளை கௌரவித்து, காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்று 63 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 65 லட்சத்து 17 ஆயிரத்து 620 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இன்று (15.08.2018) நடைபெற்ற 72-வது சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பை பார்வையிட்டு மரியாதையை ஏற்றுக்கொண்டு 8 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவித்து, 63 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பல்வேறு பள்ளி, கல்லூரிகளைச் சார்ந்த மாணவ - மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்தார்.

சுதந்தர தின விழாவில் வருவாய்த்துறையில் ஒருவருக்கு தங்கப்பதக்கம் உட்பட 4 நபர்களுக்கும், நாளைய அப்துல் கலாம் விருது வென்ற மாணவன் ஒருவருக்கும், சர்வதேச அளவில் நடைபெற்ற பள்ளிகளுக்கிடையேயான கடற்கரை கையுந்துபந்து போட்டிகள், யோகா போட்டிகள் மற்றும் மாநில அளவிலான உயரம் தாண்டுதல், கூடைப்பந்தாட்டம், டேக்வாண்டோ போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற வீரர் வீராங்கனைகள் 6 பேர் உட்பட கல்வித்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 2 பேருக்கும், கால்நடை பராமரிப்புத் துறையில் 1 நபருக்கும், சுகாதாரத்துறையில் 2 நபர்களுக்கும், நகராட்சியில் 1 நபருக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையில் 1 நபருக்கும், முன்னாள் படைவீரர் நலத்துறையில் 2 நபர்களுக்கும், கருவூலம் மற்றும் கணக்குத்துறையில் 03 நபர்களுக்கும், தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் 5 நபர்களுக்கும் ஆக மொத்தம் 36 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.6,450 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள் ரூ. 12 ஆயிரத்து 900 மதிப்பீட்டிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.5,018 மதிப்பிலான விலையில்லா சலவைப் பெட்டி ரூ.10 ஆயிரத்து 036 மதிப்பிலும், முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை ரூ.75 ஆயிரத்து 069 மதிப்பிலும், சமூக நலத்துறை சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 20 குழந்தைகளுக்கு தலா ரூ.25,000 வீதம் அவர்தம் பெற்றோர் 10 பேருக்கு ரூ.5 லட்சம் மதிப்பிலான வைப்புத் தொகை இரசீதுகளும், வேளாண்மைத் துறையின் சார்பில் பவர் டில்லர் உள்ளிட்ட வேளாண் உபகரணங்கள், விதைநெல் மற்றும் இடுபொருட்கள் என 10 பயனாளிகளுக்கு ரூ.44 லட்சத்து 17 ஆயிரத்து 225 மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு பாசனக் கருவிகள் ரூ. 2 லட்சத்து 76 ஆயிரத்து 176 மதிப்பிலும்,

தாட்கோ நிறுவனம் மூலம் சுயதொழில் செய்வதற்கு வாகனம் வாங்கிட 7 பயனாளிகளுக்கு ரூ.42 லட்சத்து 66 ஆயிரத்து 214 மதிப்பிலும், மகளிர் திட்டம் சார்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் 10 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.34 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளும், 5 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் விவசாயம் மற்றும் வேளாண் கருவி வாங்குவதற்கான கடனுதவியும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் 8 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.33 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளும் என ஆக மொத்தம் 63 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 65 லட்சத்து 17 ஆயிரத்து 620 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் நாகப்பட்டினம் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, அன்னை சத்யா அரசு காப்பகம், நாகூர் மாடர்ன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம் நடராஜன் தமயந்தி மேல்நிலைப் பள்ளி, நாகூர் கிரசன்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, செம்பனார்கோவில் கலைமகள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, செம்பனார்கோவில் தாமரை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மயிலாடுதுறை புனித சின்னப்பர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, குரவப்புலம் பாயிண்ட் காலிமர் இண்டர்நேஷனல் பள்ளி, திருமங்கலம் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட 10 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ - மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.செ.விஜயகுமார்,இ.கா.ப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன், நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.கமல் கிஷோர்,இ.ஆ.ப, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சங்கர், பயிற்சி ஆட்சியர் திரு.மன்சூர், தனித்துணை ஆட்சியர்(சமூகப்பாதுகாப்புத்திட்டம்) திருமதி.எம்.வேலுமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஆர்.கோவிந்தராஜூலு, தமிழ்நாடு ஊர்க்காவல்படை மண்டல தளபதி திரு.ஆனந்த் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ - மாணவியர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**